வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.210/21
வழக்கு சாட்சி – அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஞானகுரு | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.23

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தேனியில் குடியிருந்து வருகிறேன். நான் கம்புயுட்டர் சேல்ஸ்சர்வீஸ் கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். எதிரியை தெரியும். எதிரி என்னுடன் வேலை பார்த்தார். 17.9.20 அன்று எனக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தை எதிரி வாங்கி சென்றார். அன்றையதினம் இரவு அல்லிநகரம் காவல்நியைத்திலிருந்து என்னை அழைத்து எனது இருசக்கரவாகனம் விபத்தில் ஈடுபட்டதாக கூறினார்கள். வாகனத்தின் அசல் ஆவணங்களை கொண்டு வரச்சொன்னார்கள். நான் காவல்நிலையத்தில் சென்றபின்பு அங்கு வைத்து சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்னது போல் சொன்ன தேதி நேரத்தில் நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் போலிசர் என்னை அழைத்துவிசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் போலிசாரிடம் எந்த ஆவணங்களையும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.